


**29. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. உலகளாவிய அமைதி ஸ்திரத்தன்மையின் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. ஆரோக்கியமான வளமான சமுதாயத்தை உருவாக்க விளையாட்டின் அவசியத்தை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா சுட்டிக்காட்டியுள்ளார்.

3. அரசு மருத்துவமனைகளை தரம் உயர்த்த நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தொிவித்துள்ளார்.

4. வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத் திருவிழா இன்றுமாலை தொடங்குகிறது.

5. தைவான் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் சாம்பின் பட்டத்தை இந்திய இணை வென்றது.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர் பயணம்

பிரதமர் திரு.நரேந்திரமோடி உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான் நாடுகளுக்கு 4 நாள் பயணமாக இன்று புறப்பட்டார்.

முன்னதாக பிரதமர் வெளியிட்ட அறிக்கையில், வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தும் இந்த பயணத்தை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பரவலாக்கப்பட்ட கொள்கைகளின் ஒருபகுதியாக மின்னணு கட்டமைப்பு, பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட பிரிவுகளில் ஒருங்கிணைப்பு குறித்து அந்நாட்டு தலைவர்களுடன் தாம் ஆலோசிக்க உள்ளதாகவும் கூறினார்.

கிர்கிஸ்தான் பிஷ்கெக்கில் வரும் நாளைமறுநாள் நடைபெறவுள்ள 26-வது ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் உரையாற்றும் பிரதமர், உலகளாவிய அமைதி, ஸ்திரத்தன்மை, தீவிரவாத நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு உள்ளிட்ட விஷயங்கள் குறித்தும் முக்கிய ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

தேசிய விளையாட்டு தினம்

தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய இளைஞர்நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா உள்ளிட்டோர் வாழ்த்து தொிவித்துள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் வெளியிட்ட செய்தியில் இந்திய தடகள விளையாட்டு வீரர்களின் சிறந்த பங்களிப்பு சர்வதேச அளவில் நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக கூறியுள்ளார்.

பிரதமர் வெளியிட்ட செய்தியில், விளையாட்டு வீரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தால் நாடு பெருமை கொள்வதாக கூறினார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா ஆரோக்கியமான, வளமான சமுதாயத்தை உருவாக்க விளையாட்டின் அவசியத்தை வலியுறுத்தினார்.

முன்னதாக வாரந்தோறும் ஆடுகளத்தில் ஒருமணிநேரம் இயக்கத்தையும் அமைச்சர் துவக்கி வைத்தார்.

தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில் பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையிலான மத்திய அரசு நாட்டில் வலுவான ஒருங்கிணைந்த விளையாட்டு கட்டமைப்பை உறுதி செய்து வருவதாக கூறினார்.

விளையாட்டுத் துறையில் இளைஞர்கள் ஆளுமையை அதிகரித்து மிகப்பெரும் வெற்றிகள் மூலம் நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டுமென கூறிய அவர், உலகளாவிய விளையாட்டு மையமாக இந்தியாவை மேம்படுத்த உறுதியேற்போம் என கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய ஹாக்கி வீரர் மேஜர் தியான்சந்தின் பிறந்த நாளை முன்னிட்டு ஆண்டுதோறும் ஆகஸ்ட் 29-ம் தேதி தேசிய விளையாட்டு தினம் கடைப்பிடிக்கப் படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

நிறுவனநாள்

விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தை தமிழர்கள் அறிமுகம் செய்ததாக குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பெருமிதம் தொிவித்துள்ளார்

ஈரோட்டில் உள்ள தனியாா் கல்லூரியின் நிறுவனநாள் விழாவில் இன்று உரையாற்றிய அவர், செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக், செமி கண்டக்டர் உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்ட பிரிவுகளில் இளைஞர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்வதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

கடுமையான பயிற்சி மற்றும் இடைவிடாத முயற்சியின் மூலம் தங்களது இலக்குகளை எட்ட முடியும் என கூறிய அவர், மாணாக்கர் அடிப்படை கல்வியிலிருந்து ஆராய்ச்சி படிப்பிற்கான உயர்ந்த குறிக்கோள்களை அடைய வேண்டும் என்றார்.

உலகின் வேகமான பொருளாதார சக்தியாக இந்தியா வளர்ந்து வருவதை சுட்டிக்காட்டிய குடியரசு துணைத்தலைவர் நாட்டின் வளர்ச்சியில் பொறுப்பு மிக்க இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்றார்.

கொண்டாட்டங்களில் பங்கேற்கும் அவர், கல்வி, பொதுசேவை கலாச்சார பாரம்பரியம், தொழில்துறை கூட்டமைப்பு சார்ந்த பல்வேறு முக்கிய நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அமெரிக்காவின் Asheville-ல் இன்று நடைபெறும் ஜி-20 நிதி மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார நிதி விவகாரங்கள் குறித்து இதில் விவாதிக்கப்படும்.

6 நாள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள திருமதி. நிர்மலா சீதாராமன் நியூயார்க்கில் நாளைமறுநாள் நடைபெறும் நிதியமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

நேபாளம்

நேபாள பெருவெள்ளத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 626 ஆக அதிகரித்துள்ளது.

ஆயிரக்கணக்கானோரை தேடும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

திருஷ்ஷுழி – 1 நீர்மின் நிலைய திட்டப்பணிகளில் ஈடுபட்டிருந்த 63 இந்தியர்கள் உட்பட சீன எல்லைப் பகுதியில் 400 இந்தியர்கள் பாதுகாப்பாக உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தொிவித்துள்ளது.

நிலைமையை மத்திய அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், காணாமல் போன எஞ்சியவர்களை தேடும் பணி விரைவுப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

இதனிடையே நேபாளத்திற்கு சுற்றுலா சென்ற 39 தமிழர்கள் திபெத்தில் பாதுகாப்பாக இருப்பதாகவும், இவர்கள் நாளைமறுநாள் தாயகம் அழைத்து வரப்படுவார்கள் எனவும் செய்திகள் தொிவிக்கின்றன.

இந்தியாவிலிருந்து 3ம் கட்டமாக 10 டன் நிவாரணப் பொருட்களுடன் சிறப்பு விமானம் காட்மாண்டு சென்றுள்ளது.

நேபாள துயர சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் நிலை மற்றும் அவர்களை பத்திரமாக அழைத்து வருவது குறித்து, தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் தொ◌ிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மத்திய அரசுடன் இணைந்து மீட்பு நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

முன்னதாக ஈரோடில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் தமிழகத்தில் வறட்சி பாதிப்பு குறித்து ஆராய விரைவில் குழு அமைக்கப்படும் என தொ◌ிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 137-வது முறையாக பிரதமர் திரு. நரேந்திரமோடி நாளைகாலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, mygov இணையதளம், news on air செயலியில் இந்நிகழ்வு நேரடியாக ஒலிபரப்பாகும்.

❖❖❖❖❖❖❖❖

அருண்ராஜ்

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளை தரம் உயர்த்த நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தொ◌ிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அரசு தலைமை மருத்துவமனையில் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல் உபகரணங்கள் வழங்கப்படும் என்றார்.

அனைத்து தலைமை மருத்துவமனைகளும் 24 மணி நேரமும் செயல்படுவது உறுதி செய்யப்படும் என்று கூறிய அமைச்சர், மருத்துவர்கள், செவிலியர்கள் காலி பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டத்தில் பிரதமரின் ஜன்தன் வங்கி கணக்கில் 3 லட்சம் பேர் இணைந்துள்ளதாக மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. வினாயக மூர்த்தி தொ◌ிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

நாகை

நாகை வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டுப் பெருவிழா இன்றுமாலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

முக்கிய நிகழ்ச்சியான தேர்பவனி வரும் 7-ம் தேதி நடைபெறுகிறது.

பேராலய திருவிழாவை முன்னிட்டு தமிழகம் மட்டுமல்லாமல் அண்டை மாநிலங்கள் வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் வேளாணங்கண்ணி வந்தவண்ணம் உள்ளனர்.

இந்த ஆண்டு 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இத்திருவிழாவிற்கு வருவார்கள் என எதிர்பார்ப்பு உள்ளதால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

2 ஆயிரத்து 300 காவலர்கள் பணியில் ஈடுபட்டுள்ளதுடன் 27 இடங்களில் உயர்மட்ட கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

குடிநீர், தங்குமிடம், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

நாமக்கல்

நாமக்கல் பூம்புகார் விற்பனை நிலையத்தில் கைவினை பொருட்கள் கண்காட்சியை ஆட்சித் தலைவர் திரு. மதுபாலன் இன்று தொடங்கி வைத்தார்.

வரும் 7-ம் தேதிவரை இக்கண்காட்சி நடைபெறுவதாக எமது செய்தியாளர் தொிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் குடமுழுக்கு முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகளை மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் நாளைமறுநாள் சுபமுகூர்த்த தினத்தை முன்னிட்டு கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்று பதிவுத்துறை தொிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் e-KYC கைரேகை பதிவு செய்யும் முகாம் இன்றுமாலை 5 மணிவரை நடைபெறுகிறது.

குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் விவரங்களை இம்முகாம்களில் சரிபார்த்து கொள்ளலாம் என மாநில அரசு தொிவித்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி மாணாக்கர் நடப்பாண்டிற்கான கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. துர்கா மூர்த்தி தொிவித்துள்ளார்.

திருச்சி தேசிய தொழில்நுட்ப கல்விக்கழகத்தில் மாரத்தான் போட்டியை கல்பாக்கம் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மைய விஞ்ஞானி திரு. மாறன் இன்று தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

தைவான் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் நிதின்குமாா் சின்ஹா, மணீஷ் சுரேஷ்குமாா் இணை வென்றது.

தாய்பே-யில் இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஜப்பானின் **Shinji Hazawa, Taisei Ichikawa** இணையை 6-3, 6-4 எனும் செட்களில் நிதின்குமார் இணை வென்றது.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் துபாயில் நாளை இந்தியா - தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖